மலர் 1 இதழ் 2 அக்டோபர், 2016 ISSN : 2454-3993

# நான்காம் தமிழ்ச் சங்கம் பாண்டியன் நூலகம்

தி.பிருந்தா
நூலகர், செந்தமிழ்க் கல்லூரி,
மதுரை,

**முன்னுரை**

இனிய தமிழுக்கும் மாநகர் மதுரைக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு வரலாற்றுப் பழமையானது. தமிழகத்தின் தொன்மைமிகு வரலாற்றின் புகழ்மிக்க அறிவுக்கூடமாகத் திகழ்வது நான்காம் தமிழ்ச் சங்கம். பழம் நிறைந்த மரத்தை நாடி வரும் பறவைகள் போலப் பலரும் தேடி வந்து பயன்பெற்றுச் செல்லும் நான்காம் தமிழ்ச் சங்கத்தின் பாண்டியன் நூலகம் மதுரையின் அறிவுக் கருவூலமாகும். 115 ஆண்டு காலப் பழமையும் பெருமையும் மிக்க இந்நூலகத்தின் வரலாற்றையும் சிறப்புகளையும் விளக்குவது இக்கட்டுரையின் நோக்கம்.

**தோற்றம்**

பண்டைக்காலந்தொட்டே தமிழரசர்கள் தமிழை வளர்த்தனர் என்பதைச் சங்கப் பாடல்கள் மூலம் அறியலாம். பின் தமிழ்நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களினால் பிற நாட்டவரின் மொழி மற்றும் பண்பாட்டுத் தாக்கங்கள் ஏற்படலாயின. அக்காலத்தில் தமிழை ஆதரிக்கும் அரசர்களும் குறைந்ததினால் தமிழ் மொழியின் வளர்ச்சி தடைபடத் தொடங்குகையில் சேதுபதி மன்னர்களின் தமிழ்ப்பற்று அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தது.

மதுரைத் தமிழ்ச் சங்கம் 14-9-1901 இல் சேதுபதி உயர்பள்ளி மண்டபத்தில் ஒன்பது நோக்கங்களுடன் நிறுவப் பெற்றது. அவ்வொன்பான் நோக்கங்களையும் நிறைவேற்றத் துவக்கிய அமைப்புகள் ஏழு. அவற்றுள் ஒன்றே இப்பெரு நூல்நிலையமாம் பாண்டியன் புத்தகசாலை. சேதுபதி வேந்தர்கள் தொகுத்து வைத்திருந்த நூல்களும் பொன்னுச்சாமித் தேவரும் பாண்டித்துரைத் தேவரும் தொகுத்து வைத்திருந்த நூல்களும் வழங்கப்பெற்றன.

பாண்டியன் நூலகம் அன்றைய நாளில் "பாண்டியன் புத்தகசாலை" என அழைக்கப்பட்டது. "இச்சாலைக்கு உரியார் தலைமைப் புத்தகசாலையாளர், உதவிப் புத்தகசாலையாளர் என

இருவர். இவ்விருவரும் புத்தகசாலைக்குரிய எல்லாப் புத்தகங்களையும் ஏடுகளையும் அட்டவணைக் குறிப்புடன் ஒழுங்காகவும் சாவதானமாகவும் வைத்துக் கொண்டும் வந்து படிப்போர்க்கு அவ்வப்போது எடுத்துக் கொடுத்து வரும் நூல்களைக் குறிப்புப் புத்தகத்திற் பதிவு செய்து படித்தவர் கையெழுத்து வாங்கியும் உத்திரவாதிகளாயிருந்து வேலை பார்த்தற்குரியவர்கள். காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை யாவரும் புத்தகசாலைக்குள் வந்து புத்தகங்கள் வாங்கிப் படித்துவரலாம். எவ்விதக் காரணத்தாலும் அங்ஙனம் கொடுக்கும் புத்தகங்களைப் புத்தகசாலையினின்றும் வெளியேற்றல் கூடாது. அவ்வக்காலங்களிற் புத்தகசாலைக்கு விலை கொடுத்து அல்லது விலையின்றி வாங்கப் பெறும் புத்தகங்கட்குத் தனித்ததோர் குறிப்பு வைத்துக்கொண்டு, அதன் விவரங்களைக் குறிப்புப் புத்தகத்திற் பதிவு செய்து கொள்ளல் வேண்டியது" என்பது 1903 ஆம் ஆண்டு கூடிய மதுரைத் தமிழ்ச் சங்கச் சபையினரால் இப்புத்தகசாலை தொடர்பாக முடிவு செய்யப்பட்ட சங்க விதியாகும்.

**அமைப்பு**

1901 முதல் 1990 வரை பாண்டித்துரைத் தேவரின் மாளிகையிலேயே சங்கமும் கல்லூரியும் நூலகமும் அச்சகமும் தொடர்ந்து இயங்கி வந்தன. 1999 ஆம் ஆண்டு மிகப் பெரிய நூலகம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பெற்றது. 2001 ஆம் ஆண்டில் தமிழ்ச் சங்கத்தின் புகழைப் பறை சாற்றுவது போல நுழைவாயிலின் முகப்பிலேயே நடுநாயகமாக ஓங்கி உயர்ந்த கட்டிடமாய் மணிமகுடத்தின் மாணிக்கக் கல்லாய்ப் பாண்டியன் நூலகம் பழைய சேவையைப் புதிய பொலிவுடன் துவக்கியது. போதிய வெளிச்சம், நல்ல காற்றோட்டம், வசதியான இருக்கைகள், குடிநீர் மற்றும் கழிப்பறை வசதி என வாசகர்களின் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்யும் உட்கட்டமைப்போடு சிறந்து விளங்குகிறது.

**நூல்கள்**

தமிழ்ச் சங்க நூலகத்தில் கிடைக்கப் பெறாத தமிழ் நூல்கள் வேறு எங்கும் கிடைத்தல் அரிது என்று கூறும்வகையில் 52,000 தமிழ் நூல்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது இப்பாண்டியன் நூலகம். கல்லூரி நூல்கள் ஒரு பிரிவாகவும் தமிழ்ச் சங்க நூல்கள் ஒரு பிரிவாகவும் வைக்கப் பெற்றுள்ளன. தமிழ்ச் சங்க நூல்கள் பார்வை நூல்களாகப் பயன்படுத்தப்பட்டும் பராமரிக்கப்பட்டும் வருகின்றன. இவை தவிர 200 ஓலைச் சுவடிகள், 1300 இளநிலை மற்றும் முனைவர் பட்ட ஆய்வேடுகள், 40 இதழ்கள், 200 குறுந்தகடுகள், நூற்றுக்கணக்கான மின் நூல்கள் எனப் பழமையும் புதுமையும் ஒருங்கே கொண்டுள்ளது கணினிமயமாக்கப்பட்ட இந்நூலகம். ஆசிரியரின் பெயர், புத்தகத் தலைப்பு, வெளிவந்தஆண்டு, பதிப்பாளர் விபரம் என எந்தவொரு தேடல் மூலமாகவும் புத்தகத்தைப் பெறும் வசதி இங்குள்ளது.

**ஓலைச்சுவடிகள்**

தமிழ்ச் சங்கம் துவக்கப்பட்ட நாளிலிருந்தே நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் அரிய பல ஏட்டுச் சுவடிகளைத் தொகுக்கும் பணியும் தொடங்கியது. தமிழ்ச் சங்க நூலகத்தில்

இருந்த பல நூறு ஓலைச்சுவடிகள் தமிழ் ஆராய்ச்சிக்கும் நூலாக்கத்திற்கும் அடிப்படையாய் இருந்தன.

முற்காலத்தில் மடாதிபதிகள் தங்கள் மாணாக்கர் மூலம் ஒரு சுவடிக்குப் பல பிரதிகள் தயாரித்துப் பலருக்குத் தானமாகக் கொடுத்துள்ளனர். இதனைக் கிரந்ததானம் எனக் குறிப்பிடுவர். இது போன்ற செயல்பாட்டினாலும் பல அறிஞர்கள் தங்களுக்குத் தேவையான சுவடிகளை மற்றவர்களிடமிருந்து பிரதி செய்தமையாலும் இன்று ஒரு தலைப்பில் பல சுவடிகள் கிடைக்கப் பெறுகின்றன. பாடபேதங்கள் இருப்பின் ஒப்பிட்டு ஆய்வு செய்வதற்கும் காலத்தால் முற்பட்டதைக் கணிக்கவும் பல நூல்களைப் பதிப்பிப்பதற்கும் இவ்வோலைச் சுவடிகள் பெருமளவு பயன்படுத்தப்பட்டன.

சௌரிப் பெருமாள் அரங்கனார் குறுந்தொகைப் பதிப்பு, பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் நற்றிணைப் பதிப்பு, உரைவேந்தர் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை நற்றிணைப் பதிப்பு, டாக்டர். உ.வே.சாமிநாதையர் புறநானூற்றுப் பதிப்பு, சைவ சித்தாந்த சமாஜத்தின் சங்க இலக்கியப் பதிப்பு முதலியவற்றுக்குத் தமிழ்ச் சங்க ஏடுகள் பயன்பட்டமை அப்பதிப்புகளில் பதிவு செய்யப்பட்ட செய்திகளாகும்.

தமிழ் லெக்ஸிகன் பதிப்பாளர் ச.வையாபுரிப்பிள்ளை அவர்கள் 1929 இல் பிங்கலந்தை மற்றும் அகப்பொருள் விளக்கநிகண்டு ஓலைச்சுவடிகளைக் கேட்டு எழுதியுள்ள கடிதம் ஓலைச்சுவடிகளைத் தமிழ்ச் சங்கத்திற்கு நேரில் வந்துதான் பயன்படுத்த முடியும் என்ற நிலை இல்லாமல் தமிழறிஞர்களுக்கு ஓலைச்சுவடிகளை அனுப்பியும் கல்விச் சேவை புரிந்தமைக்குச் சான்றாக விளங்குகிறது.

கூடற்புராணம் மற்றும் திருநூற்றந்தாதி ஆகியவை சங்கச் சுவடி ஒன்றாலேயே உருவானவை. ஐந்திணை ஐம்பது, இனியதுநாற்பது, கனாநூல், புலவராற்றுப்படை, நேமிநாதம், திணைமாலை நூற்றைம்பது, பன்னிருபாட்டியல், நான்மணிக்கடிகை, பழமொழி நானூறு, மதுரைத் திருப்பணிமாலை, நரிவிருத்தம், மாறனலங்காரம், திருப்புல்லாணிமாலை, பொருட்டொகை நிகண்டு, அகராதி நிகண்டு ஆகிய நூல்களெல்லாம் சங்கச் சுவடிகளைக் கொண்டு ஆய்ந்து வெளிப்பட்டவையாகும்.

இதிகாசம், புராணம், பிரபந்தம், நிகண்டு, நீதிசாஸ்திரம், இலக்கியம், இலக்கணம், சைவம், மருத்துவம், இசை, பிரயோகம், ஸ்தோத்திரம், தத்துவம், கணிதம், வரலாறு, ஆகமம், யோகா எனப் பல்வேறு துறைகளைச் சார்ந்த ஓலைச்சுவடிகள் பாண்டியன் நூலகத்தில் உள்ளன.

இன்றும் இந்நூலகத்தில் தமிழ், கிரந்தம் மற்றும் தெலுங்கு எழுத்துக்களால் எழுதப்பட்ட 200 ஓலைச்சுவடிகள் பயன்பட்டும் பாதுகாக்கப்பட்டும் வருகின்றன. இச்சுவடிகள் அழியாவண்ணம் மரபுவழி மற்றும் நவீன முறை பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தஞ்சை சரஸ்வதி மகால் நூலகம், தேசியச் சுவடிகள் குழுமம், அரசு அருங்காட்சியக சுவடிகள் பாதுகாப்பு மையம், அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம் போன்ற பல்வேறு அமைப்புகளுடன் இணைந்து ஓலைச் சுவடிகளைச் சுத்தம் செய்தும் மின்னணுவாக்கம் செய்தும் பாதுகாக்கப்பட்டுள்ளது.

**அரிய நூல்கள்**

பாரெல்லாம் பைந்தமிழ் பரவுக என்று நாடெங்கிலும் பறை சாற்றிய பாண்டித்துரையாரின் ஆர்வத்தினாலும் ஆசையினாலும் பல அரிய நூல்கள் கிடைத்தன. நூற்றாண்டுப் பழமை வாய்ந்த பல நூறு நூல்கள் பாண்டியன் நூலகத்தில் உள்ளன. கொடுந்தமிழ் (1848), தமிழ் நன்னூல் (1848), தமிழ்ப் பாடநூல் - பதின்மப்பள்ளித் தேர்வு (1886), பதினெண் சித்தர்களின் மகாமருத்துவம் பொருந்திய தேரையர் வைத்திய காவியம் (1894), திருக்குறிச்சி விவேகம் - மூலமும் உரையும் (1899), நன்னூல் காண்டிகையுரை (1900), விதானமாலை (1900), ஜானகிபரியை தமிழ் நாடகம் (1901), ஐந்திணை ஐம்பது (1902), கனா நூல் (1902), ஞானாமிர்த மூலமும் உரையும் (1903), புலவராற்றுப்படை (1903), இனியதுநாற்பது (1903), நேமிநாதம் மூலமும் உரையும் (1903), திருநூற்றந்தாதி (1904), அநுமானவிளக்கம் (1904), பன்னிருபாட்டியல்,(1904), நான்மணிக்கடிகை (1904), தமிழ்ச் சொல்லகராதி (1905), சுகசந்தர்சனதீபிகை (1905), ஸ்ரீ வாணி விலாசினி (1905), விவேகபானு (1904), வைத்தியசாரசங்கிரகம் (1906), தேவையுலா (1907), நரிவிருத்தம் (1907), மதுரைத் தமிழ்ச் சங்க மான்மியம் (1907), சிதம்பரப் பாட்டியல் (1908), தருக்கபாஷை (1908), விக்கிரம சோழனுலா (1908), சாஸ்திரக் கோவை (1908), வித்யாபானு (1910), ஞானாமிர்தகட்டளை (1910), மநீக்ஷாபஞ்சகம் (1912), அகப்பொருள் விளக்கம் (1913), அபிதான சிந்தாமணி (1914), உவமான சங்கிரகம் (1914), திருத்தணிகைத் திருவிருத்தம் (1914), குருமொழி வினாவிடை (1914), திருப்புல்லாணிமாலை (1915) என இப்பட்டியல் நீள்கிறது.

**தமிழ்ச் சங்க வெளியீடுகள்**

தமிழ்ச் சங்க வெளியீடுகளை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவை சங்கப் பதிப்பு, செந்தமிழ்ப் பிரசுரம் மற்றும் சங்கப் பிரசுரம் என்பனவாகும். மதுரைத் தமிழ்ச் சங்க அச்சகத்திலிருந்து நேரடியாக வெளியிடப் பெறும் நூல்கள் சங்கப் பிரசுரங்கள் ஆகும். சங்கப் பிரசுரமாக 24 புத்தகங்கள் இதுவரை வெளிவந்துள்ளன. ஏட்டுச் சுவடிகளை ஆராய்ந்து ஆய்வுரையுடன் சிறு சிறு பகுதிகளாகத் திங்கள்தோறும் செந்தமிழ் இதழில் வெளியிடப் பெற்றன. பின்னர் முழுமை பெற்றவுடன் செந்தமிழ்ப் பிரசுரங்களாக வெளியிடப் பெற்றன. செந்தமிழ்ப் பிரசுரங்களாக 71 நூல்கள் வெளிவந்துள்ளன. சங்கப் பதிப்பாக 12 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவை பாண்டியன் நூலகத்தில் தனிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ளன.

**செந்தமிழ் இதழ்**

தகவுடை வாழ்வு தமிழ் வாழ்வே. இங்குள்ள செந்தமிழ் இதழ்கள் அத்தகு வாழ்வளிக்க வழி செய்வன. துறைதோறும் துறைதோறும் தமிழ்மொழிக்குச் செய்ய வேண்டும் நல்ல தொண்டு என்ற நோக்கத்தில் செந்தமிழ் என்னும் திங்களிதழ் மதுரைத் தமிழ்ச் சங்கத்தால் தொடங்கப் பெற்றது. 1902 ஆம் ஆண்டு திசம்பர் 7 ஆம் நாள் செந்தமிழ் இதழின் முதல் பகுதி வெளிவந்தது. அன்றிலிருந்து இன்று வரை எவ்விதத் தடையுமின்றித் தன் நோக்கம் மாறாமல் சிறந்த ஆராய்ச்சி இதழாக மலர்கிறது.

செந்தமிழ் இதழில் புலமை தோய்ந்த ஆய்வாளர்கள் பலர் தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு, கலை, இலக்கணம் போன்ற பல்வேறு துறைகளில் கட்டுரைகளைப் பதிப்பித்து வருகின்றனர். இச்செந்தமிழ் இதழானது தமிழாராய்ச்சி உலகில் பிற ஆராய்ச்சி இதழ்களுக்கு முன்னோடியாகத் திகழ்கிறது. 1902 முதல் இன்று வரை வெளியான இத்தகு செந்தமிழ் இதழ்கள் தமிழ்க்கல்வி மற்றும் தமிழாய்வுக்குப் பயன்படும் வண்ணம் இந்நூலகத்தில் தொகுத்து வைக்கப் பெற்றுள்ளன.

**முடிவுரை**

செந்தமிழ்க் கல்லூரி மாணவர்கள் மட்டுமல்லாது பிற கல்லூரி மாணவர்களும் ஆய்வாளர்களும் தமிழ் அறிஞர்களும் ஆர்வலர்களும் வருகை புரிந்து பயன்பெற்றுச் செல்லும் அறிவுப் பெட்டகமாய்த் திகழ்கிறது இப்பாண்டியன் நூலகம். வேறு எங்கும் கிடைக்காமல் தேடி வந்த நூல்கள் இங்கு கிடைத்தது கண்டு பெருமகிழ்ச்சியும் பிரமிப்பும் அடைந்த வாசகர்கள் எண்ணிலடங்கா. சிறந்த நூல்களின் சேர்க்கையாக, பழைய ஓலைச்சுவடிகள் பலவற்றின் இருப்பாக, நல்நிலையில் தேவைக்கேற்ப பயன்கொள்வோர்க்கு வழங்கியும் செம்மொழியாம் தமிழ்மொழிக்குச் சேவையாற்றும் இந்நூலகம் தமிழ் ஆய்வாளர் எவரும் தவிர்க்க இயலா தனிச்சிறப்புடையது. இது "மதுரையின் அறிவுலகத் தமிழ்த் திருக்கோவில்" எனில் மிகையில்லை.